பதிவுப்பத்திரிகையாகப்
பதிவுசெய்யப்பட்டது.

இந்துசாதனம்.

விரோதி௵ (1889)
ஆவணி௴ உ௩௳
ஸ்தாபனம்

பத்திரக் கிரயம்.

யாழ்ப்பாணப் பட்டினம்: ௵ 1-க்கு	ரூ.	5-60
வெளியூர், இந்தியா: "	ரூ.	9.40
தொலைவாய்ப்பகுதி: "	ரூ.	9.10
தனிப்பிரதி:	சதம்	6

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

THE HINDU ORGAN.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

விளம்பர விகிதம்.

முதன்முறைக்கு:—ஒருகலம்	ரூ.	9-40
" அரைக்கலம்	ரூ.	5-00
" கால்கலம்	ரூ	3 15
" ஒரு அங்குலம்	சதம்	65

அடுத்த முறைகட்கு மேல் விகிதங்களிற் பாதி
விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றி கவனிக்கப்படா

புத்தகம்—௩௯. } யாழ்ப்பாணம்:—விபவ௵ வைகாசி௴ ககஉ; (1928 மேமீ 24) வியாழக்கிழமை. { இலக்கம்—௮௮

உ
கணபதிதுணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவமபூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரமபூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
போர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர்தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலெனமூன்று
மதம்பூத்தவிநாயகன்றுள் வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்க்கவே.

சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப பல வியாதிகளைக குணப்படுத்தியதால அவர்கள மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள. இதைக்கான வியாபாரத்தில உலககளைமைக்காகப் பிரசுரித்திருக்கிறேன. ஆனால் பிரபுக்கள மாத்திரமலல ஏழைகளும இதனுலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைககருதியே இப்போதுஇந்த லேகியத்தைபபற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பூதாளு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸதாஸ, சார்பபருப்பு, பாதமபருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகபபூ வங்கபஸ்பம், அபாகபஸ்பம, பவளபபஸ்பம, வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம சாமபிராணிப் பதங்கம் இன்னும அநேக புஷ்டியான மூலிகைவகைகள சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பககவாய்வு இன்னும அநேக கடுமையான வியாதிகள் நீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள சுகமடைவதுடன் சூதக வாய்வு, பிரசவ அறையில் உண்டாகும நோய்கள நீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரைருத்தலுக்கு ரூபா கப. கால் ருத்தலுக்கு ரூபா ரு. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினாங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததினால் முன்மணி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கியசுகாதாரவைத்தியசாலை
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு,
சிலோன்.

(M. 36.)

கௌரவ ஸேர் பொன் இராமநாதனவர்கள் இயற்றிய நூல்கள்.

1. செந்தமிழ் இலக்கணம் முதற்பாகம் (எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும்) நன்னூற் சூத்திரங்களைத் தழுவி இலகுவான உரைநடையில் இயற்றப்பெற்றது. 545 பக்கங்கள் கொண்டது. உயர்ந்த பதிப்பு ரூபா 3-00. சாதாரண பதிப்பு ரூபா 2 அணு 8.
2. பகவற்கீதா — தமிழ் மொழிபெயர்ப்பும் விருத்தியுரையும் 517 பக்கங்கள் கொண்டது ரூபா 2-00.
3. திருக்குறள் பாயிரமும் இராமநாதீயம் என்ற விருத்தியுரையும 143 பக்கங்கள் கொண்டது ரூபா 1-00.

மானேஜர்,
இராமநாதன் கல்லூரிப் புத்தகசாலை,
(H 64) சுன்னாகம், யாழ்ப்பாணம்.

ஜாதக விளம்பரம்.

ஜாதகபலன் அறியவிரும்புவோர் ஜாதகக் குறிப்பையாவது, அல்லது பிறந்த வருஷம், மாதம், திகதி, கிழமை, நேரம், ஆண், பெண், பிறந்த ஊர் இவைகளைத் தெளிவாக எழுதி அனுப்பித் தற்கால பலன் அறிய ரூபா 1—00

ஜாதகக் குறிப்புக்கள் ரூபா 1, 2, 7, வரையிலும், ஜாதகங்கள் 10 ரூபாய் முதல் 150 ரூபா வரையிலும் எழுதிக்கொடுக்கப்படும்.

ஆருடம் ஞாயிறு வியாழக்கிழமைகளில் சொல்லுவோம. கடித மூலமாய் அறிய விரும்புவோர் கடிதம் எழுதும் நேரத்தைக் குறிப்பிட்டு எழுதவும். மூன்றுகேள்விகளுக்குட்பட ரூபா 1. மேற்பட்ட ஒவ்வொருகேள்விக்கும் சதம் 25 (அணு 4.)

மற்றும் விபரங்கள் கடித மூலமாயறிந்து கொள்ளலாம். பதில் வேண்டுவோர் முத்திரை (ஸ்டாம்பு) அனுப்புதல் வேண்டும்.

விலாசம்:—
க. கனகசபை.
சோதிடர்,
அன்னசத்திரத்தடி,
கந்தர்மடம்,
(Q. 101.) யாழ்ப்பாணம்.

திருவாலங்காட்டுத் தேர்த் திருப்பணி.

:O:

மூர்த்தி தலம் தீர்த்தம் வாய்க்கதும், பஞ்ச சபைகளுள்ளே ரத்தினசபையை உடையதும், சமயகுரவர், காரைக்காலம்மை, அருணகிரிநாதர், பட்டணத்தடிகள் முதலிய மகான்களின் பாடல் பெற்றதும ஆகிய திருவாலங்காடென்னும வடாரணய க்ஷேத்திரத்திலே நெடுநாள ரதமின்றி யிருந்தமையால், திருவருளை முன்னிட்டு ஓர் ரதத்தை நூதனமாயமைக்க ஆரம்பித்து இலங்கைவாசிகள் உபகரித்த பணத்தைக்கொண்டு அத்தேசத்திலுள்ள அருமையான மரங்களும சிலை இருசு (அச்சு) களுந் தருவித்து, இதற்கென அமைக்கப்பெற்ற நகரக் கொட்டகையிலே, பிரபவ௵ கார்த்திகைமீ கசுஉ [illegible] சுபதினத்திலே முகூர்த்தஞ்செய்து இதுவரை சதுரப்பட்டடை மட்டம் வேலை நிறைவேறிவருகிறது. இத்திருப்பணி நன்கு பூர்த்தியாக இன்னும் நாற்பதினாயிரம ரூபா வரையில வேண்டியதாயிருப்பதால் சிவநேயச் செல்வர்களனைவரும் தங்கள் தங்களாலியன்ற பொருள் உதவி இத்திருப்பணியை இனிது முற்றுவித்து வடாரண்யேஸ்வரபெருமானாரது திருவருளைப்பெறும்வண்ணம வேண்டுகிறோம்.

இங்ஙனம்,
சச்சிதாநந்தராஜயோகி,
(T S W Y Swami.)

திருவாலங்காடு (போஸ்ட்)
விபவ௵ சித்திரைமீ ககஉ
(Q.102.)

காணி விற்பனவு.

வாழைத் தோட்டம் எனப்படும் 100 ஏக்கர் கொண்ட நிலம். முழுவதும் தென்னந்தோட்டம் பழைய் புகைரதஸ்தானத்திலிருந்து 5மைல்தூரத்தி லுள்ளது. விபரமறிய விரும்புவோர் எமக்குத் தெரிவிக்கவும்.

V. வல்லிபுரம்,
கந்தர்மடம்.
(M 64.) யாழ்ப்பாணம்

வெற்றிலை! வெற்றிலை!! வெற்றிலை!!!

வியாபாரிகளே! உங்களுக்கு வெற்றிலை தேவையானால் கீழ்க்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதுங்கள். இலங்கையிலுள்ள மிகவுந் திறமான வெற்றிலை இங்கே மிக மலிவான விலைக்குக் கிடைக்கும். எந்தத் தினிசான வெற்றிலையும் இலங்கையிலுள்ள எந்த இடங்களுக்கும் புகைரதமூலமாக எப்பொழுதும் அனுப்பலாம். விசேஷமாகக் கலியாணவீடு மற்றும் கொண்டாட்ட தினங்கள் முதலியவற்றிற்கு வெற்றிலை அனுப்புவதற்கு எப்பொழுதும் ஆயத்தமாக விருக்கிறோம். சென்ற 36 வருஷங்களாக இலங்கையிலுள்ள பல பாகங்களிலும் மிகவும் திருப்திகரமான வியாபாரஞ் செய்திருக்கிறோம்.

எமது விலாசத்திற்கு ஒரு தந்தி மணி ஓடர் சமீபமான புகைரதஸ்தானத்தைக் குறிப்பிட்டனுப்பினால் அடுத்த புகைரத மூலமாகவே வெற்றிலை யனுப்புவோம். அயலூர்களுக்கே எந்தக்காலமும் நாங்கள் வெற்றிலை அனுப்பிப் பெரிய வியாபாரஞ் செய்துவருகிறோம். ஒருமுறை எங்களிடத்தில் நீங்கள் வெற்றிலை வாங்கினால் பின் வேறேரிடத்திலும் வாங்க மாட்டீர்கள். இது திண்ணம்! எங்கள் தந்திவிலாசம் ஆக இரண்டு சொற்களே யுடையன.

மற்றும் விபரங்களுக்கு எழுதவும்.

S. P. A. மகிறிஸ் அப்புகாமி,
கம்பகா.

S. P. A. Magiris Appuhamy,
Gampaha - W. P

தந்தி விலாசம்:—
மகிறிஸப்புகாமி,
கம்பகா.
Tel. Add:—"Magrisappuhamy",
(H. 62) Gampaha.

சுப்பிரமண்ய ஜோதிடம்.

இந்தியா தேசமெங்கும் தலைமைபெற்றுப் பிரகாசிக்கும் ஜோதிடாலயம் இதுவே.

உங்கள் அதிஷ்டத்தை ஏன் தெரிந்துகொள்ளக் கூடாது. இன்றே யெழுதி உங்கள் அதிஷ்டத்தைத் தெரிந்துகொள்ளுங்கள்.

உங்கள் எதிர்காலப் பலனைப்பற்றிய 6 கேள்விகளுக்குப்பதில் எழுத ரூபா 1-00. மேல் தனிக் கேள்விகளுக்கு அணு 4 ஒருவருஷப் பலன் எழுத ரூபா 2-00. கடிதம் எழுதும்போது உள்ள நேரத்தை யாவது ஜாதகக் குறிப்பையாவது தெரியப்படுத்தவேண்டியது. மற்ற விபரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

சர்வஜய வசீகரணி.

தாயித்தை 1-க்கு ரூபா 2—8—0

இது எல்லாவிதமான காரியங்களிலும் ஜெயமபெற்று வருவதுமன்றி செய்வினை போய் நல்வினை யுண்டாக்கும். எல்லா விதமான காரியங்களிலும் அனுகூலப்படும்.

மானேஜர்,
ஸ்ரீ சிவசுப்பிரமணிய
ஜோதிட நிலயம்.
(Q 103) திருத்தணி, சித்தூர்ஜில்லா.

தங்கப்பவுண் அடையாளமிடப்பட்ட கொளுக்கிஓடுகள்.

இலங்கையில் இதுவே திறமான ஓடாக மதிக்கப்பட்டுவருகிறது. இது மிக உரமானது; நீடித்திருக்கத்தக்கது; அழகானது; எல்லாரும் இதனையே விரும்புகிறார்கள்.

காரணம்:

இந்தச்சாதி ஓடுகளின் விசேஷம் அநுபவத்திற் கண்டது. இந்த ஓட்டை நாங்கள் இங்கே தருவித்தபின் இதனை எல்லாரும் வாங்கி உபயோகிக்கின்றனர். ஒருமுறை வாங்கி உபயோகித்துப் பாருங்கள். ஓடுகள் யாழ்ப்பாணம் பெரிய கடையிலுள்ள எங்கள் பண்டசாலையிலும், பருத்தித்துறையிலுள்ள எங்கள் பண்டசாலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

S. வீரகத்திப்பிள்ளை,
தொண்டமானுறு.
(Q. 100)

சமய சந்தேகம் ஏன்?

இந்தியாவிலும் மற்றுங் கீழைத்தேசங்களிலுமுள்ள அநேகர் உபாதைப்படுகின்றார்கள்.

ஏனெனில் அநேகமான மருந்துகளில் மிருகக்கொழுப்புச் சேர்ந்திருப்பதால் அவர்கள் அதைப் பயங்கரத்தோடு வெறுக்கின்றார்கள்.

மிருகக்கொழுப்புச் சிறிதுஞ் சேராத

லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம்

என்னும் மருந்தினால் உண்மையான சுகத்தை யடையலாம்.
இந்துக்களாயினுஞ்சரி மகமதியர்களாயினுஞ்சரி
கிறிஸ்தவர்களாயினுஞ்சரி புத்தர்களா
யினுஞ்சரி எல்லோரும் நம்பிக்கை
யோடு உபயோகிக்கலாம்.

எவ்வித வலிப்பையும் நோவையுந் தீர்ப்பதற்கு
இந்தியாவில்கைகண்ட மருந்து.

எல்லாரசாயனசாலைகளிலும் மருந்துக்கடைகளிலும்
பெற்றுக்கொள்ளலாம்.

(Y. 51.)

இலங்கை
ஆயுர்வேத வைத்தியகல்லூரி
யாழ்ப்பாணம்.

இக்கல்லூரியின் வருஷாந்த விடுமுறையின் காலம் முடிவுறுதலுடன் இவ்வருடம் ஆனிமாசம் முதலாந்திகதி வழமைப்பிரகாரம் வைத்திய கல்லூரி ஆரம்பமாகும். அத்துடன் ஆயுள்வேத வைத்தியத்தை மட்டும் கற்கத் தேற விரும்புவோர்க்கு அதைத் தனிமையாகக் கற்பிக்கவும் பிறவூர் வாசிகட்கு விசேஷதர்பனை (கொறஸ் போண்டன் கோஸ்) மூலமாயும் கற்பித்துத் தேர்ச்சிப் பத்திரம் கொடுக்க எத்தனித்திருப்பதால விரும்புவோர் மேற்படி கல்லூரித் தலைவருக்குத் தங்களது மனுப்படிவங்களை அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இலங்கா ஆயுள்வேத வைத்திய கல்லூரித் தலைவர்
(M. 66.)

விளம்பரம்.

இந்த மாதம் 15-ந்திகதி பின்னேரத்திலிருந்து தெல்லிப்பழை மிஷன் பாடசாலையில் 7-ம் வகுப்பிற் படித்துக்கொண்டிருந்த இ. கடுவிலான் என்னும் 14 வயதுப் பையனைக் காணவில்லை. பொது நிறச் சிவலை, தலை சிலுப்பா, 4 அடி உயரம், நீண்ட முகம், சிவந்த பெரிய கண்கள், முன்தலையிற் சமீபத்தில் இலைப் பிடித்த காயத்தழும்பு, எவரிடமும் கூசாமற் பேசுந் தன்மையும் சுறுசுறுப்புமுள்ளவன், வலது தோளிற் கறுப்படையாளம். தயவுசெய்து இந்தப் பையனைக் கண்டு பிடித்தோர் பின்வரும் விலாசக்காரனுக்கறியத்தரும்படி கேட்கிறேன்.

இ. சின்னத்தம்பி மேசன்.
(Mis. 1216) பழை, தெல்லிப்பழை Post.

இந்துசாதனம்.

யாழ்ப்பாணம் விபவ௵
வைகாசி௴ ௧௧௳ வியாழக்கிழமை.

மதுபரிபாலனப் பகுதி.

உ

மதுபரிபாலனப் பகுதிச் சோதனை உத்தியோகஸ்தர்களையும் சேவகர்களையும் அவர்கள் தம் கடமை செய்யப் போனபோது சிற்சில சமயத்தில், மாமேறிகளும் அவர்களுக்குத் துணையான சிலரும் எதிர்த்து அடித்துக் காயப்படுத்தியமையினால், மதுப்பகுதி உத்தியோகஸ்தர் கையில் தற்காப்பின் பொருட்டுத் துப்பாக்கியும் குறுந்தடியும், போலிஸ் பகுதியாருக்குக் கொடுத்திருப்பது போற் கொடுப்பதற்கும் வேண்டிய காலத்தில் அவற்றை உபயோகித்தற்கு அதிகாரங் கொடுப்பதற்கும் அரசினர் நிச்சயித்திருக்கின்றனராம். போலிசர் துப்பாக்கி குறுந்தடி என்னுமிவைகளை உடையராயிருந்தாலு அவற்றை, அவைகளுள்ளும் விசேஷமாகத் துப்பாக்கியை உபயோகித்தற்கு இற்றைவரையில் அவர்கட்கு அதிகாரமில்லையாம். துப்பாக்கிகளை உபயோகித்தற்கான அதிகாரத்தை அரசினர் முன்னொரு முறை போலிசருக்குக் கொடுக்க முயன்றபோது அச்செயலைக் கேள்விப்பட்ட ஊரவர்கள் பெரிதுந்திகில் அடைந்தமையினாற் பின்னர் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்யும் அதிகாரம் போலிசருக்கு இல்லாதொழிந்தது, போன உயிர் மீண்டுவரப் போவதில்லை; ஆதலால் உயிரைக் கொல்லும் அதிகாரம் இன்றேல் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்யும் அதிகாரம் பொறுப்புவாய்ந்த இராணுவத்தாரிடமன்றி ஏனையோரிடத்தில் இருப்பது ஒள்ளியனல்லாள் மேல் வைத்தல் குரங்கின்கைக் கொள்ளிகொடுத்துவிடல் என்றபிரகாரமாகவே முடியும். அரசாங்க அதிகாரிகள் வேண்டாத சந்தர்ப்பத்தில் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்தவிடத்து ஒரு உயிர்ச்சேதம் வந்தாலும் அது வேண்டிய சந்தர்ப்பத்திற் செய்யப்பட்ட நீதியான உயிர்ச்சேதமாக முடிதலே சகசம்.

இனி மதுபரிபாலனப் பகுதியாரேனியோ பெரும்பான்மையும் மதுபானத்தோடு ஊடாடுமியல்பினராகலின் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்யவேண்டிய சந்தர்ப்பமெது வென்பது இவர்களுக்கு நன்கு புலப்படாது. ஆனதால் இந்த அதிகாரமொன்றையும் அரசினர் மதுப்பகுதியாருக்குக் கொடாதொழிதல் வேண்டும். அவர்கள் செய்ய விரும்பிய பிரகாரம் பிரதான இடங்கள் தோறும் மதுபரிபாலனப் பகுதியார் காவலுக்குரிய ஸ்தானங்களை வைத்திருத்தலாகும். மதுப்பகுதியாரிடத்து மதுவிலக்கு அபிமானிகள் வெறுப்புக்கொள்வதும், மதுபான அபிமானிகள் பகை பாராட்டுவதும் அரசினர் குறை கூறுவதும் இந்த மதுப்பகுதியாரின் சீர்கேட்டினாலேயாகும். எந்தப் பகுதி உத்தியோகஸ்தராக விருந்தாலும் அவர்கள் தங்கள் கடமையிற் றிறம்பாது பட்சபாதமின்றிச் செய்துவருவரேல், முகமன்பாராட்டாதொழிவரேல், பொருளுக்காசைப்படாது விடுவரேல் நீதியைச் செய்ய வேண்டுமென்று நினைப்பரேல், தம் நயம் கருதாதொழிவரேல் ஒருபோதும் அவர்கள் தங்கள் கடமையினின்றுந் திறம்பமாட்டார்கள். அரசினர் இந்த மதுபரிபாலனப் பகுதியாரை விசாரித்தற்கும் இவர்களிடத்துள்ள குறை குற்றங்களை அகற்றி இவர்களை ஊருக்கு நன்மை பயக்கும்படி நடக்குகொள்ளச் செய்தற்குமாக ஒரு விசாரணைச் சங்கத்தாரை நியோகித்தல் நன்றாகும். மதுபரிபாலனப் பகுதியால் நேரும் அரசிறைப் பணச்செலவு கொஞ்சமல்ல. இப்பொழுது இவர்களிருக்கும் நிலைமையிலேயே இனிமேலும் இவர்களிருந்து வருவாராகில், மதுபானத்தால் ஊருக்கு வருங் கேட்டிலும் பார்க்க இவர்களால் வரும் நஷ்டம் சிறிதுங் குறையமாட்டாது.

உலகம் பலவிதம்.

“எங்களுக்குஞ் சமமதந்தான்; கள்ளுத்தவறணையில்லாமல் ஒன்றுஞ் செய்ய முடியாது; எங்கள் சம்மதத்தையும் ஏற்றுக்கொள்ளுங்கள்” என்று சொல்லிக்கொண்டு யௌவனத்தோடுகூடிய மூன்று பெண்மணிகள் ஆடையாபரண அலங்கிர்தராய் அன்னமென நடந்து மயிலென ஒதுங்கி, கிளியெனப் புகன்று, கிளாலியில் கள்ளுத் தவறணை விஷயமாகச் சென்ற வாரம் சம்மதஞ் சொல்லப் போயினார்களாம். சம்மதம்பெறும்ஸ்தானத்தில் இருந்த உத்தியோகஸ்தர் அந்த மூவரையும் பாதாதிகேசம்வரையில் உற்றுப் பார்த்து “நீங்கள் பெண்கள் போற் காணப்படுகின்றீர்கள்; ஐயோ! தங்கச்சிமாரே, கதிரவன் கிரணங்கள் உங்கள் திருமேனியை வாட்ட, பாதம் நோவ, இச்சுடுமணலில் வீணாக ஏன் நடந்து வந்தீர்கள்? இந்த விஷயத்தில் ஆண்களின் சம்மதமன்றிப் பெண்கள் சம்மதம் தேவையில்லை”யென்றாராம்; “ஏன், கள்ளுத் தேவையானவர்கள் ஆருஞ் சம்மதஞ் செல்லலாமே” என்று அந்த மூவருள் ஒருத்தி கேட்டாளாம் “அப்படியல்ல, பெண்களுக்கு அது தேவையாகவிருந்தாலும், சம்மதஞ் சொல்லும் விஷயத்தில் ஆண்களுடைய சம்மதந்தான் ஏற்றுக்கொள்ளப்படும்” என்று அந்த உத்தியோகத்தர் மிக்க பரிவுடன் பதில் கூறினாராம். இந்தக் குலக்கொடிகள் மூவரும் சம்மதஞ் சொல்லுந் தானத்திற்கு வந்து காலூன்ற நிற்பதைக்கண்ட ஐயாத்தம்பியும், அண்ணன் விசுவநாதனும், விதானையாரும் பெண்கள் நிற்கத் தாம் இருக்க மனம் பொறாதவர்களாய்ச் சரேலென எழுந்து “ஐயோ, ஏன் நிற்கிறீர்கள்; இப்படி உட்காருங்கள்” எனத் தலைவணங்கித் தாழ்ந்து இரந்து கேட்க, “வேண்டியதில்லை; நாங்கள் சம்மதஞ் சொல்லவந்தோம்; இதற்கு ஆண்களுடைய சம்மதமன்றிப் பெண்களின் சம்மதம் வேண்டியதில்லையென்று துரை சொல்லுகின்றார்; ஆனபடியால் நாங்கள் போகப்போகின்றோம்” என்று அந்தப் பெண்மணிகளுள் ஒருத்தி வாய்விட்டனளாம்; அப்பொழுது ஐயாத்தம்பி “அப்படியல்ல, நீங்கள் இங்கே சமுகமாகவிருந்தால் உங்கள் முகத்திற்காகப் பலர் கள்ளுவேண்டுமென்று சம்மதஞ் சொல்லுவார்கள்” என்றார்களாம். அண்ணன் விசுவநாதன் அவர்களை நோக்கி “நீங்கள் நடந்துவந்ததோ, இல்லையேல் வண்டியில் வந்ததோ” என்று வெகு மரியாதையோடு வினவ, “வீடு சமீபத்திலேதான். நாங்கள் நடந்துவந்தோம்” என்று அப்பெண்களுள் இன்னொருத்தி பதிற்சொல்ல “போகும்போது நடந்துபோக வேண்டியதில்லை; பொல்லாத மணல்; நான் என்னுடைய காரில் உங்களைக் கொண்டுபோய் விடுகின்றேன்” என, அவர்கள் மறுக்க விதானையார் “நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம். அவரோடு போவதிற் குற்றமில்லை” என்று விதானையார் சொல்ல, சிதேவியின் தமக்கை போன்ற மூன்று பெண் செல்வங்களும் சிறிது நேரம் அங்கேயிருந்துவிட்டுப் பின்னர் மோட்டாரத்திலேறிக்கொண்டு போய்விட்டார்களாம். முருகேசு சொல்லுவதால் இது கற்பனையென்று எவரும் எண்ணவொண்ணாது; இது முழுவதும் பொய்யல்ல; இப்படிப்பட்ட மொட்டிகள் இங்கிருக்க மழை யெப்படிப்பெய்யும்.

* * *

கிளாலியிலிருக்கும் சொல்விளம்பியப்பன் அல்லாரையிலிருக்கும் மதுநாயகம்பிள்ளையைச் சாவகச்சேரிச் சந்தையிற் சந்தித்து “அண்ணே, எங்கள்சங்கதி தெரியுமோ, வெற்றி எங்களுக்குத்தானே; கேள்விப்பட்டீர்களோ” எனலும் மதுநாயகம்பிள்ளை “தம்பி, கேள்விப்பட்டேன்; அது மெத்தச்சந்தோஷம்; அது கிடக்க, “எங்களுடையசமாசாரம் உனக்குத் தெரியாதோ” என்றார். “இல்லை, அண்ணே, நான் ஒன்றுங் கேள்விப்படவில்லை” என்று சொல்விளம்பியப்பன் சொல்லுதலும் “அது வாய்க்கவில்லை, தம்பி, அல்லாரையாரும் பலாலியாரும் எங்களை அடித்துக் கெடுத்துவிட்டார்கள்; நாங்களும் நம்பி மோசம்போய் விட்டோம்; சரி உங்களுக்கு எல்லாரும் உதவியாக நின்றார்களென்று கேள்வி; மெய்தானோ” என்று மதுநாயகபிள்ளை கேட்டார், “அண்ணே அதைக் கேட்கவும் வேண்டுமோ; தலைமைக்காரர் எங்களோடு; மதுப்பகுதியார் எங்களோடு; ஊரவர்கள் எங்களோடு; பெண்கள் தாமும் எங்கள்பக்கம்; தலைமைக்காரருக்குத் தலைவர்மாத்திரம் இடையிலே இனிப் பிற இடங்களிலிருந்தும் எங்கள் கூட்டாளிமார் சிலர் வந்து விடாதே பிடி என்று நின்று காரியத்தை நிறைவேற்றினார்கள்; நம்பிக் குடியிருக்கில் மாசார் கிளாலி எழுதுமட்டுவாள் மிருசுவில இப்படிப்பட்ட இடங்களிலல்லவா குடியிருக்கவேண்டும்; இந்த ஊர்களிலிருப்பவர்களல்லவா மனுஷர்கள்; மற்றவர்களும் மனுஷராமோ; இந்தச்சமையத்தில அவர்கள் செய்த உதவிகளை நாஞ் சொல்ல முடியுமா” என்று சொல்விளம்பியப்பன் சொல்லிப் பின்னருஞ் சொல்லுகின்றான்.

* * *

“அண்ணே, மாசார், கிளாலி, எழுதுமட்டுவாள், மிருசுவில் என்னுங்கிராமங்களிற் குடியிருப்பவர்கள் தங்கள் பொருள் போனாலும் பெண்டிர் பிள்ளைகள் அலைந்தாலும் தாங்கள் மானங்கெட்டு மரியாதைகெட்டு நாசமாகப்போனாலும் ஒருபோதும் எங்களைக் கைவிடமாட்டார்கள்; எங்களுடைய அருமை அவர்களுக்குத்தான் தெரியும்; அங்குள்ள பெண்களுட் சிலரும் எங்களிடத்து அன்பு பாராட்டுகிறார்கள்; நாங்கள் இனிமேல் உங்களைப் போல் மறைந்து திரியவேண்டியதில்லை. நாங்கள் இனிப் புகைரதத்திற் பிரயாணஞ் செய்வோம்; மோட்டர் லொறியிற் பயணம்பண்ணுவோம்; மோட்டாரத்தில் ஏறித் திரிவோம்; நாங்களிருக்கும் இந்தக் கிராமங்களில் எங்கள் கூட்டாளிகளாகிய சோரம்பிள்ளை, காமமுதலி, கொலையப்பன், குருத் துரோகியென்று சொல்லப்படும் இவர்களும் எங்களுக்குத் துணையாகக் குடியிருக்கிறார்கள். ஒருபோது மாசார் முதலிய இக்கிராமவாசிகளுக்குப் போன எங்களைத் திரும்பிக்கூப்பிடுவது மரியாதைக் குறைவென்று நீ நினைக்கக்கூடும்; அண்ணே, அப்படி நினையாதே; மரியாதையுள்ளவர்களல்லவோ அது ஒருபோது போய் விட்டதேயெனப் பயப்படக்கூடும்; எங்கள் கிராமங்களிலுள்ளவர்கட்கு மரியாதை இருந்தாற்றானே போகமுடியும்; அதிகம் பேசுவதென்ன எங்களையில்லாமல் அவர்கள் குடியிருத்தல் முடியாது” என்று சொல்விளம்பியப்பன் சொன்னான்.

* * *

தம்பி, உங்களுக்கு அந்த ஊரார் வசதியாக வாய்த்திருக்கிறார்கள்; ஆனால் நாங்கள் வசிக்கும் கச்சாய், மீசாலை, சாவகச்சேரி முதலிய இடங்களிலிருப்பவர்கள் மிகவும் பிடிவாதமானவர்கள்; அவர்கள் பெரிதும் அபிமானமுடையவர்கள்; ரோசமுள்ளவர்கள்; எங்களைக் கைக்கொள்ளுவோர் சிலர்தா னிருக்கின்றார்கள்; தலைமைக்காரரும் மற்றும் உத்தியோகத்தரும் அபிமானிகளும் பெரியோர்களும் பெண்களும் பள்ளிக்கூடச் சிறுவர்களும் எங்களுக்கு மாறாகவே யிருக்கின்றார்கள்; அதனாலே நாங்கள் அங்கே தலையெடுக்க முடியாது; அவர்கள் இப்பொழுது எங்களைப்பற்றி நல்லா யறிந்து கொண்டார்கள்; ஆனதால் எங்களூர்களில் எங்கள்பக்கமாக இருப்பவர்களையும் உங்களூருக்குத்தான் அனுப்பிவைப்போம்; அவர்கள் அப்படி வருகிற காலங்களில் நீங்கள் அவர்களை உபசரித்தனுப்புங்கள்; எங்களூரில் ஆடவர்களாயுள்ளவர்களை இருவாறு எங்கள்பக்கத்திற்கு இழுக்கலாமென்றாலும் பெண்கள் எங்களுக்கு முழு விரோதமாக நிற்கிறார்கள்” என்று சொல்லிப் பெருமூச்சுவிட்டு மதுநாயகம்பிள்ளை சொல்விளம்பியப்பனிடம் அநுமதி பெற்றுக்கொண்டு மீண்டார்.

பதினெண் புராணம்.

(முற்றொடர்.)

15. வைணவபுராணம். விஷ்ணுசம்பந்த முடைமையாலிப்பெயர் பெற்றது. வைஷ்ணவ புராணமெனவும் விஷ்ணுபுராணமெனவும் வழங்கப்படும். ஆறாயிரங் கிரந்தங்களையுடையது. அண்டவிலக்கம வேதசாகைகளின்பிரிவு தருமாதருமம் ஆச்சிரமம் விஷ்ணுமூர்த்தியின் பிரபாவங்கள் முதலியவற்றைக் கூறுவது.

16. பாகவதபுராணம். பகவத் சம்பந்த முடையமையாலிப்பெயர் பெற்றது. இது சுகர்பாகவதமெனவும் வழங்கப்படும். பதினெண்ணாயிரங் கிரந்தங்களையுடையது, பன்னிருஸ்கந்தங்களாலும் இருநூறு அத்தியாயங்களாலும் சுருதி கீதைமுதலிய பன்னிருகீதைகளாலும் புனையப்பட்டது. ஏழுதினங்களுட் சர்ப்பந்தீண்டி யிறக்குமாறு பெற்றசாபத்தினின்றும் நீங்கிப் பரிசித்துமகாராசனுய்யும்பொருட்டு, கங்காதீரத்திருந்த சுகமுனிவரால் உபதேசிக்கப்பட்டது. விஷ்ணுவின் நான்கு அவதாரம் நான்குபக்தர்களின் சரித்திரம் காயத்திரிமகிமை முதலியவற்றைக் கூறுவது. தேவிபாகவதத்தையே விஷ்ணுபுராணத்தொன்றாய பாகவதமென்பர் சிலர்.

17. ஆக்நேயபுராணம். அக்கினிசம்பந்தமுடைமையாலிப்பெயர் பெற்றது. எண்ணாயிரங்கிரந்தங்களையுடையது, யாகம் அக்கினியின்பெருமை விஷ்ணுவின் அவதாரங்கள் சிவனைக்குறித்துச்செய்யும் ஞானபூசை பிரபஞ்ச லக்கணம் அரசிறை முதலியவற்றைக் கூறுவது.

18. பிரமகைவர்த்தபுராணம். பன்னீராயிரங் கிரந்தங்களையுடையது. மனுக்களுளொருவர் நாரதமுனிவர்க்குபதேசித்த கிருஷ்ண சரிதம் ஆதித்தர்வரலாறு பிரமவராகமான்மியம் முதலியவற்றைக் கூறுவது.

காலநிலை.

மழை முற்றாகவில்லை; கடுங்காற்று வீசுகிறது; ஊரிலே பலவகையான நோய்களும் பரவியிருக்கின்றன. நீடித்தகாலம் மழையின்மையாலே பெருமரங்களும் வாடிப் பயன்குன்றலாயின. கிணறுகளில் நீர்குறைகின்றது. இவ்வுப்பகுதியிற் சில கிராமங்களிற் குடிக்குந் தண்ணீருக்கும் அங்குள்ள சனங்கள் முட்டுப்படுகின்றனரென அறியலானேம்.

மகோற்சவம்.

வண்ணார்பண்ணை இயனூர் கோவிலடி விஸ்வேசப் பிள்ளையார் கோவிலில் நாளைத்தினம் (25-5-28) துவஜாரோகணமாகி மகோற்சவம் நடைபெறும்.

விவாகம்.

இந்த வைகாசி௴ ௩௳ புதன்கிழமை காலை 7 மணிவரையில் நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில் தொரியிற் பெரிய வியாபாரசமுதாயத்தின் சொந்தக்காரரான ஸ்ரீ S. பொன்னுச்சாமியவர்களின் புத்திரி ஸ்ரீமதி. தேவமணியம்மாளுக்கும், மானிப்பாய் ஸ்ரீ N. செல்லத்துரையவர்களின் புத்திரன் ஸ்ரீ விவேகானந்தராசாவுக்கும் விவாகம் மணமகளில்லத்திலேயே வெகு சிறப்பாக நிறைவேறி அன்று தொடக்கம் நான்கு நாட்களாக விசேஷ கொண்டாட்டங்கள் உபசாரணைகள் நடைபெற்றன. இம் மணமகள் ஆங்கில தமிழ்க் கல்வியறிவு சங்கீத கதாப்பிரசங்கஞ் செய்யுமாற்றல் முதலிய சுகுணங்கள் அமைந்த ஒரு கன்னிகையென அறியலானேம். தம்பதிகள் அட்ட ஐசுவரியங்களையும் பெற்று இன்புற்று இனிது வாழும் வண்ணம் சிவபிரான்திருவருள் முன்னிற்க.

பழையபடி கள்ளு.

சென்ற வாரத்தில் நாற்றுக்கு 60 விகிதமானோரின சம்மதம பெற்று, பின்வரும் இடங்களிலுள்ள கள்ளுத்தவறணைகள் திறக்கப்படுமென சிகரிக்கப்பட்டன. 1. மாசார், 2. கிளாலி, 3. எழுதுமட்டுவாள் வடக்கு, 4. எழுதுமட்டுவாள் மேற்கு, 5. மிருசுவில். விகிதம் போதாமையினால் திறக்கப்படாதொழிந்தன பலாலி, அல்லாரையென்னுமிரண்டுமாம.

"வைத்திய ஈசன்" பட்டம்.

முன்னர் இப் பத்திரிகையில் தெரிவித்த பிரகாரம் வண்ணார்பண்ணை ஆயுர்வேத வைத்தியராகிய ஸ்ரீ. ஆ. வைரமுத்து அவர்களுக்கு சென்ற ஞாயிற்றுக்கிழமை (20-5-28) பின்னேரம் 4 மணிவரையில் வைத்தீசர வித்தியாலயத்தில் ஒரு சபை கூட்டி வைத்திய ஈசன் பட்டம் உதவப்பட்டது. அச்சமையத்தில் பிறக்டர் ஸ்ரீ க. கனகசபையவர்கள் சபைத் தலைவராக விருந்து கூட்டத்தை நடத்தினர். வைத்திய சங்கக் காரியதரிசியாகிய பிறக்டர் ஸ்ரீ K. ஐயாத்துரையவர்கள் பட்டத்தைச் சபைத்தலைவரிடம் கொடுப்ப அவர் மேற்படி வைத்தியரிடம் உதவினர். பிறக்டர் ஸ்ரீ ஐயாத்துரை, நியாயதுரந்தரர் ஸ்ரீ M. S. இளையதம்பி ஆகிய இவர்கள் மேற்படி, வைத்தியரின் திறமைகளைப்பற்றியும் ஆயுர்வேதத்தைப்பற்றியும் சில குறிப்புரை கூறினர். சபையின்கண்ணே பல ஆயுர்வேத வைத்தியர்களும் மற்றும் அபிமானிகளும் குழுமியிருந்தனர். மாலை 6 மணிக்குமேல் சபையார் மேற்படி வைத்தியர் அவர்களை மேளவாத்தியசகிதமாக வித்தியாலயத்திலிருந்து மிக்க ஆடம்பரத்துடன் அவரது இல்லத்திற்கு அழைத்துச் சென்றனர். "வைத்திய ஈச"னவர்கள் எல்லோரையும் தமது இல்லத்தில் தாம்பூலமாதியன கொண்டு உபசரித்து அனுப்பினர்.

புகைரத விபத்து.

காலிப்புகைரதப்பாதையில் சென்ற திங்கட்கிழமை காலை காலிக்கும் தொடர்துவைக்குமிடையில் ஓர் பிள்ளை புகைரதத்தால் நெரியுண்டு இறந்தது. மற்றொன்று நீர்கொழும்புப் பாதையில் நிகழ்ந்தது. கந்தான் என்னுமிடத்திற்கும் ஜாயெலா என்னுமிடத்திற்குமிடையில் ஓர் பெண்ணின் தலைவேறு உடல்வேறாக் கிடக்கக் காணப்பட்டான். காலையில் நீர்கொழும்பிலிருந்து வரும் புகைரதத்தால் நெரியுண்டு இறந்திருக்க வேண்டுமென அனுமானிக்கப்படுகிறது.

கப்பலும் வள்ளமும் மோதுண்டமை.

கொழும்புத் துறைமுகத்தில் சென்ற சனிக்கிழமை ஒல்லாந்த தேசத்துக் கப்பலொன்றும் ஒரு சங்கடவள்ளமும் ஒன்றுடனொன்று மோதுண்டன. வள்ளம் அதிக சேதமடைந்தது. வள்ளத்திலிருந்தோர் தண்ணீருக்குள் வீசப்பட்டார்கள். வள்ளக்காரரில் ஒருவன் அமிழ்ந்தினான். கப்பல் போய்க்கொண்டிருந்த வழியைக் குறுக்கறுத்து வள்ளம்சென்றபொழுதே இரண்டும் மோதிக்கொள்ள நேர்ந்தது. மோதுண்ட அதிர்ச்சியினால் வள்ளத்திலிருந்தோர் தண்ணீருக்குள் வீசப்பட்டார்கள்.

செவிலித்தாயர் (நேசஸ்)க்கு விசேஷ பயிற்சி.

இலங்கை வைத்தியசாலைகளிலுள்ள செவிலித்தாயர்களில் இங்கிலாந்து சென்று விசேஷ பயிற்சி பெறவிரும்புபவர்களைத் தெரிவுசெய்யும் நோக்கமாகக் கூடிய கூட்டமொன்றில் 6 பெண்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார்கள். இவர்களுடைய பெயர்கள் இப்பொழுது அரசாட்சியாருக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் இங்கிலாந்தில் 3½ வருஷகாலம் பயிற்றப்படுவதற்கு அங்கே அனுப்பப்படுவோர்கள் அவர்கள் இலங்கைக்குத் திரும்பியவுடன் வைத்தியசாலைகளில் நியமனம் பெறுவர்கள்.

மனைவியைச்சுட எத்தனித்தவருக்குக் கடூழியச் சிறை.

சலாபத்தைச்சேர்ந்த வென்னப்புவா என்னுமிடத்திலுள்ள ரொபேட் உவில்லியம் பேர்ணன்டோ என்பவர் தமது மனையாளாகும் அல்வின்நோனா என்னும் பெண்ணைத் துப்பாக்கியால் சுட்டுக்கொல்ல எத்தனித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டார். இவ்வழக்குக் கொழும்புக் கிறிமினல் விசாரணைச் சுப்பிறீம்கோட்டில் விசாரிக்கப்பட்டது. யூரிகளனைவரும் எதிராளி குற்றவாளியெனவும், அவர் இக்குற்றத்தைக் கோபத்தினாலோ அல்லது குடிவெறிமயக்கத்தினாலோ செய்திருக்கவேண்டுமெனத் தெரிகிறது எனவும், ஆகையால் அவருக்கு விதிக்குந்தண்டனை இலகுவாயிருக்கலாமெனவும் கூறினர். நீதிபதி அவருக்கு 18 மாதக் கடூழியச்சிறை விதித்தனர்.

வெள்ளிக்கிண்ணங்கள் களவுபோனமை

கொழும்பிலுள்ள கறுவாத் தோட்டம், என்னுமிடத்தில் சில காலமாக அநேக களவுகள் நடந்தன. அதன்பின் பொலிசர் எவ்வளவு ஜாக்கிரதையாக அவ்விடங்களைப் பாதுகாத்து வந்தபொழுதிலும் சென்ற ஞாயிற்றுக்கிழமை இரவு மிஸ்டர் R. T. M. பீறின் அவர்களது இல்லத்தில் ஓர் துணிகரமான திருட்டு நடந்தது. அவ்வீட்டின் மேன்மாடியிலிருந்த 3000 ரூபா பெறுமதியான வெள்ளிக் கிண்ணங்களும் இன்னொரு வெள்ளிப்பெட்டியும் களவு போய்விட்டன. அன்றிரவு குறித்த பீறின் அவர்கள் விருந்துக் கொண்டாட்டமொன்று நடத்திய பின், 11 மணியளவில் படுக்கைக்குச் சென்றனர். மற்றநாட் காலை, களவுபோயினமையைப்பற்றி வேலைக்காரர் இவருக்குச் சொன்னார்கள். எல்லாக் கதவுகளும் பூட்டப்பட்டபடியேயிருந்தன. இன்னும் யாதொன்பது தெரியவில்லை. அன்றைக்கு அவ்விடத்திலுள்ள வேறு வீடுகளுக்குள் அவர்கள் பிரவேசியாது விட்டமை நூதனம்.

மீன் வயிற்றுக்குட்சென்றமை.

புதுச்சேரியை அடுத்த கூமிட்டேரியில் சில தினங்களுக்கு முன் 24 வயதுள்ள வாலிபன் தான் பிடித்த ஒரு சென்னல் மீனைப் பல்லில் கடித்துக்கொண்டிருக்கும்பொழுது மீன் வயிற்றுக்குள்ளே போனதால் வயிறு பெருத்து, வைத்தியஞ் செய்தும் பயன்படாமல் உயிர் துறந்தான்.

தீவிபத்து.

எல்லூரில் மேமீ 18உ நிகழ்ந்த தீவிபத்தினால் ஏறக்குறைய 500 வீடுகள் நாசமடைந்தன. எல்லூர்ப் புகைரதஸ்தானத்திற்கு அருகிலுள்ள தர்பூகடம் என்னுமிடத்தில் இவ்விபத்து நிகழ்ந்ததெனத் தெரிகிறது. ஏறக்குறைய 4000 தொழிலாளர்கள் வீடின்றித்தவிக்கிறார்கள். இதற்கு மூன்று நாட்களுக்குமுன்பே ஓர் பெரிய தீவிபத்து நிகழ்ந்து 2000 வீடுகள் எரிந்து சாம்பராயின. அரசினர் இவ்வூர் வாசிகளின் பிழைப்புக்கு உதவி செய்வதற்கு ரூபா 10,000 அனுமதித்திருக்கிறார்கள்.

ஊமைப்பையன் புல்லாங்குழல் வாசித்தல்.

பவனகரில் 15 வயதுடைய ஒரு சிறுவன் எவரிடமும் பேசாது ஊமைபோல் காணப்படுகிறனும். ஆனால் இவன் புல்லாங்குழலையோ வேறு இசைக் கருவியையோ வாயில் வைத்துச் சங்கீத முழக்கஞ் செய்து கொண்டேயிருக்கிறனும். இவனைத் தொடர்ந்து நூற்றுக்கணக்கினர் செல்கின்றனராம். சிறுவர்களிடம் இவன் மிக்க அன்புகாட்டிப் பணம் பட்சணம் முதலியன கொடுத்து இறைவனை நோக்கி இசை முழக்கஞ் செய்விக்கிறனும். அவ்வூரார் இவனைக் கிருஷ்ணாவதாரமோ எனக் கூறிக்கொள்கிறாராம்.

காதுகளிலிருந்து பூச்சிகள் வெளிவருதல்.

மத்திய திருவாங்கூரில் தேவாலக்கரை என்ற ஊரில் 18-வயதுள்ள ஒரு மாதின் காதுகளிலிருந்து இரண்டு நாட்களுக்கொரு முறை புதுமையான ஒருவகைப் பூச்சிகள் வந்து கொண்டிருக்கின்றன; சில வேளைகளில் கண்ணிமைகளிலிருந்தும் வருகின்றன. வெளிவந்து ஓடிவிடும் இப்பூச்சிகளைப் புட்டியில் பிடித்து அடைத்து வைத்தால் 8 நாள் வரை உயிரோடிருக்கின்றனவாம் பல வைத்தியர்களாலும் இதன் காரணத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லையாம். இதனுல் அம்மாதுக்கு எவ்வித தொந்தரவுமில்லையாம்.

மோட்டர் ரதங்கள் தங்குவதற்கு மாடிவீடு

மிஸ்டர் குமோர்ட்லி என்பவர் லண்டன் பட்டினத்தில் எட்டு மாடியுள்ள ஓர் கட்டடம் அமைக்கவிருக்கின்றார். இதற்காகப்பத்திலக்ஷம் பவுண் செலவிடப்படும். வாடகை பெற்று மோட்டர் ரதங்களைத் தங்கவிடுவதே இதன் நோக்கமாகும். இந்தக் கட்டடத்தில் மூவாயிரம் ரதங்கள் தங்குவதற்கு இடமுண்டு. தங்கிநிற்பதற்காகக் கொண்டுபோகப்படும் மோட்டாரதங்களுக்கு இடங்கொடுத்தலிலோ அல்லது திரும்பப் பெற்றுக்கொள்ளுதலிலோ கொஞ்சமும் தாமதமிராது. இவைகளெல்லாம் மின்சாரத்தின் உதவியால் நடைபெறத்தக்கதாக அமைக்கப்படும்.

18 வயதுப்பெண் தீயில் குதித்தமை.

மலையாளத்தில் காலஞ் சென்ற நீலாம்பூர்ப் பெரிய ராஜாவின் மூன்றாவது மகளான ஞானியம்மாள் என்ற பதினெட்டு வயதுப் பெண் சில தினங்களுக்குமுன் மாஞ்சேரியை அடுத்த ஊரில் நள்ளிரவில் எழுந்து தங்கள் அரண்மனைக் குளத்தில் நீராடித் தோட்டத்தில் அடுக்கியிருந்த விறகில் நெருப்பைவைத்து தனது புடவையை மண்ணெண்ணெயூற்றி நனைத்துக்கொண்டு எரிகின்ற தீயில் குதித்து விட்டாளாம். கன்னியாயிருந்த அப்பெண் தான் தீப்பாய்வதற்குரிய காரணத்தை விளக்கி ஒரு கடிதம் எழுதி வைத்திருந்தாளாம். அதன் விபரம் தெரியவில்லை.

பொறுக்கி யெடுத்தவை.

—:0:—

By V. K. S.

பைபிள் வகுப்பு.

உபாத்தியார் (பைபிளிலேயுள்ள "இடையனை மீறிப்போன ஆட்டுக்குட்டி"யென்னும்பாடத்தைப் படிப்பிக்கும் பொழுது):— "பிள்ளைகளே, அந்த ஆட்டுக்குட்டி இடையனுடைய சொல்லைக் கேட்டுக் கீழ்ப்படிந்து, எங்காவது ஓடிப்போகாமல் நின்றிருந்தால் அதை ஓநாய் தின்றிருக்குமா?"

வகுப்புப் பையன். ஒருபோதுமில்லை, சேர். அதை நாங்கள் தின்றிருப்போம்.

பாதிரியாரின் புத்திமதி.

பாதிரியார் (அதிக செலவாளியொருவனைப் பார்த்து) "தம்பி, நீர் அதிகமாய்ச் செலவு செய்கிறீரென்று கேள்விப்படுகிறேன். அது கூடாது. ஒருபோதும் உழைக்கிறது முழுவதையும் செலவழிக்கலாகாது."

செலவாளி: இப்பொழுது நான் அப்படியில்லை; உழைப்பில் மூன்றில் இரண்டுபங்கை மாத்திரஞ் செலவழிக்கிறேன்.

பாதிரியார்: அப்படியா? சந்தோஷம். மிச்ச ஒரு பங்கையும் என்ன தபாற்கந்தோரிற் கட்டிவருகின்றீரா?

செலவாளி: இல்லை, இல்லை. மிச்சத்தை என் பெண்சாதியிடம் வீட்டுச்செலவுக்காகக் கொடுத்துவருகிறேன்.

மிருகங்களின் சிரிப்பு.

அநேக மிருகங்கள் சிரிக்கின்றன வென்று ஒரு விஞ்ஞான சாஸ்திரி கண்டுபிடித்திருக்கிறாராம். எங்களைப் பார்த்துப் போலும்!

சைனுத் தளபதி.

இப்போது நடக்கும் சண்டை முடியும்வரையும் தனது பட்டாளத்திலுள்ள ஒருவராவது விவாகஞ்செய்யக்கூடாதென்று சைனதேசத்துத் தளபதி யொருவர் கட்டளையிட்டிருக்கிறார். ஒரு நேரத்தில் இரண்டு சண்டை நடத்துவது புத்தியல்லவென்பது தளபதியின் அபிப்பிராயமாயிருக்கலாம்.

பெண் கொள்ளல்

முதலாவது சிநேகிதன்: "நான் உம்மை மணக்கச் சற்றும் தகுதியற்றவன் என்பது உண்மையே" என்று நீ அப்பெண்ணுக்குச் சொல்லியிருந்தால், அவள் உன்மீது பற்றுக்கொண்டிருந்திருப்பாள். அப்படி நீ யவளுக்குச் சொல்லவில்லையா?

இரண்டாவது சிநேகிதன்: அப்படித்தான் சொல்லுகிறதற்கு நான் வாயுன்னமுந்தி அவள் அதைச் சொல்லிப்போட்டாள்.

அவள் விண்ணப்பம்.

தகப்பன்: (இரவு 1 மணிக்கு): மகளே, அந்த வாலிபன் என்ன நித்திரையா?

மகள்: அப்பா, கொஞ்சம் பொறுங்கள்; இப்ப கொஞ்சம் முந்தித்தான் அவர் தன்னை விவாகஞ்செய்து உலகத்தி லெல்லாரிலும் அதிக சந்தோஷமுள்ளவளாக்கும்படி என்னை மன்றாடினார்.

தகப்பன். அப்படித்தான் நானும் நினைத்தேன். ஆளை நித்திரையா லெழுப்பிவிடு.

மரியாதை

மரியாதையைப்பற்றிச்சொல்லுகிற ஒரு புத்தகத்தில், "ஒரு வீட்டுக்கு நீ இரண்டுமுறை போயும் அவ்வீட்டுக்காரனைச் சந்தியாவிட்டால் பின் அங்கேபோவது மரியாதைக்கு மாறு" என்றிருக்கிறதாம். வரிப்பணம் அறவிடுபவர்கள் தயவுசெய்து கவனிப்பார்களாக.

பெண்களின் சத்துருக்கள்.

பெண்கள் இருவிதமான ஆடவர்களைப் பகைக்கிறார்களாம்: விவாக மானவர்களையும் விவாகமாகாதவர்களையும்.

விளையாட்டு.

பெண்சாதி: (பத்திரிகைவாசித்துக் கொண்டிருக்கும் புருஷனைப்பார்த்து) நீங்கள் எங்கள் தோட்டக்காரன் மாமிக்குமேல் விழுந்ததைப் பற்றி யறிந்தீர்களா?

புருஷன்: இல்லை, நான் இன்னும் விளையாட்டைப்பற்றிய புதினத்துக்கு வரவில்லை.

நவநாகரிகம்.

டெனிஸ் விளையாடுபவர்: (தன்னோடு விளையாடும் இன்னொருவரைப்பார்த்து) தற்காலத்து நாகரீகம் எங்கள் பெண்பிள்ளைகளை எங்கே கொண்டுபோய்த் தள்ளிவிடுமோ தெரியவில்லை. அதோ போகிற கன்னிகையைப் பாரும். மயிரை வாலிபரைப்போற் கத்தரித்து வாலிபர் தரிக்கும் உடுப்பையே அணிந்திருக்கிறாள். ஆண்பிள்ளைகளைப்போல வரவேண்டுமென்ற வெண்ணமாக்கும்.

மற்றவர்: அது என்னுடைய மகள்.

முந்தியவர்: அப்படியா, மிகவுந் துக்கம், நீர் அப்பிள்ளையின் தகப்பனென்று எனக்குத் தெரிந்திருந்தால் அப்படிச் சொல்லியிருக்க மாட்டேன்.

மற்றவர்: நான் அப்பிள்ளையின் தாய்.

மேல் வருங்கதையைக் கலியாணப்பதிவுகாரர் ஒருவர் எனக்குச் சொன்னார்.

நான் எனது பதிவுகந்தோரில் இருக்கும் பொழுது ஒருவாலிபனும் ஒருகன்னிகையும் அங்கே வந்து தங்களது விவாகப்பதிவு செய்ய வேண்டுமென்று வேண்டினார்கள். கையெழுத்திடச் சாக்ஷிகளில்லையே, சாக்ஷிகளைச் சேகரிப்பது என்கடமையல்ல, ஆகையால் வெளியே சென்று சிறந்த இருவரைச் சாக்ஷியாகக் கூட்டிக்கொண்டுவாரும் என்றேன். அப்படியே போன மணமகனும் ஸ்திரீயும் திரும்பிவரவில்லை.

சிலநாட்களின்பின் அவ்வாலிபனை நான் தற்செயலாய்ச்சந்தித்தபொழுது "நீர் ஏன் திரும்ப வரவில்லை?" யென்று வினவினேன். அதற்கவர் "அன்றைக்கு நான் எனக்கறிந்த வொருவரைக்கண்டு சாக்ஷியாய் வரும்படி வேண்டினேன், அவருமதற்கிசைந்தார். ஆனால் அவர் எனக்குமாத்திரமறிந்தவரல்ல. அப்பெண்ணுடைய பழைய சிநேகிதன், ஏதோ காரணத்தால் கோபமாய்க்கொஞ்சக்காலமிருந்தார்கள். அன்றைக்கிருவருஞ் சந்தித்தவுடன் அவர்களுடைய கோபந் தீர்ந்து, உறவுபட்டு, வேறொரு கலியாணப்பதிவுகந்தோரிற்போய் விவாகப் பதிவு செய்தனர்." என்று துக்கத்துடன் சொன்னார். "அங்கேயும் சாக்ஷிகள் தேவை தானே"ன்று எனக்குள் யோசித்துக்கொண்டு போய்விட்டேன்.

அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

—:O:—

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவு பிடிக்கும் வண்-மேற்கு தம்பு செல்லப்பாப்பத்தர் என்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:—

இல.	டே.	ரூ.	ச	பெயர் இடம்	நகைகளின் விபரம்.
1926-ம் ஆ. சித்திரை மீ					
682	8	25	04	செல்லப்பா அருணாசலம் தலையாளி	குண்டுச்சங்கிலி ஒன்று ஒரு பவுனுடன்
ஆனி மீ					
622	5	8	04	தாமோதரம்பிள்ளை சுவாத்தினம் கலட்டி	பெட்டி மோதிரம் 1
ஆடி மீ					
645	15	5	04	வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை கொக்குவில்-மேற்கு	பிள்ளையார் தாலி 1
கார்த்திகை மீ					
833	8	5	04	சுகன் வல்லி திருநெல்வேலி	முத்துக்கடுக்கன் சோடி 1, காதுப்பூ சோடி 1, காய்க்கடுக்கன் சோடி 1
8 0	22	5	04	சின்னத்தம்பி செல்லப்பா உடுவில்	சதா கொண்டைப்பூ 1
1927-ம் ஆ. தை மீ					
9-8	1	20	04	சின்னத்தம்பி சுவரிவாயம் கொக்குவில்-மேற்கு	பெட்டி மோதிரம் 1
972	17	9	04	அப்பாக்குட்டி முத்துத்தம்பி கோண்டாவில்	அட்சரக்கூடு 1
பங்குனி மீ					
1043	5	13	04	வேலுப்பிள்ளை பொன்னம்பலம் கொக்குவில்-கிழக்கு	பெட்டி மோதிரம் 1
1059	20	5	04	இராமலிங்கம் செல்லத்துரை கொக்குவில்-மேற்கு	இமிக்கல் முகப்பு சோடி 1
சித்திரை மீ					
1077	4	10	04	சின்னப்பு கந்தையா சரவணை	குப்பிக்கடுக்கன் சோடி 1, சொன்னரப்பு 1
1101	20	11	04	இளையதம்பி தம்பு வண்-மேற்கு	அட்சரக்கூடு 1

விற்பனவு:—மேலனுப் வைகாசி மீ 27-ந் திகதிக்குச் சரியான (9-6-28) சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மேற்படி கடை பிறீக்கலாக பெருமிப் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை உடையார்,
வெஸ்றிஸ்மேஸ்தர்.

(Miq. 1217)

செந்தமிழ் இலக்கணச் சிறப்பு.

நிலவுலகின் கண் வாழும் மானுடர்க்கெல்லாம் ஞான நூலுணர்ச்சிக்கும் பிற முயற்சிக்கும் இலக்கண நூற்பயிற்சி இன்றியமையாததொன்றாம். இதுபற்றியன்றோ, "எண்ணு மெழுத்துங் கண்ணெனத்தகும்" என்றார் ஔவைப்பிராட்டியார்.

இலக்கணமுதனூல் தொல்காப்பியம். வழிநூல் பல உள. இவற்றுள், இலக்கண விதிகளை நன்கு விளக்குதலால் நன்னூல் ஒன்றேயெனக்கொண்டு பாராட்டி உரை வரைந்தார் பலர்.

ஸ்ரீ இராமநாதரவர்கள், இலக்கண வழிநூல் கண்ட ஆன்றோர் நாமங்களை மூன்றும் பக்கத்திலும், நன்னூல் உரையாளர் பெயர்களை ஆறும் பக்கத்திலும் தெளிவாக வரைந்தார்கள்.

இவ்வுரைகளை மாணவர்க்குப் பல்காற்பெருட்டினும் தெளிவிலரென்று நல்லாசிரியர் சிலர் வேண்டிக் கேட்டமையால் ஸ்ரீ இராமநாதரவர்கள் தமது அரும் பொழுதில் ஓர் சிறிது நேரத்தை இச்செந்தமிழிலக்கண விஷயமாய்ச் செலவழித்தார்கள்.

இலக்கணமாவது யாதென விளக்கிய உரையாளர் யாருமே இல்லை. இவர்கள் ஆரம்பத்திற்றானே இலக்கணம் இலக்கியம் என்னுஞ் சொற்களுக்குப் பொருள் விளக்கினார்கள்.

அதிவ்யாப்தி அவ்யாப்தி அஸம்பவம் என்னும் முத்தோஷங்களையும் நன்கு விரித்தெழுதினர்.

ஐவகை இலக்கணங்களும் இலக்கியங்களில் அமைவுற்றதைப் பற்றி மகத்துவமிக்க அகத்தியனார் கூறிய,........................(வரும்.)

வே. தா. தியாகராசபிள்ளை,
மேலைப்புலோலி.

புகைரதப்பாதையில் தடுமாற்றமான இடமாற்றம்.

மீசாலைக்குஞ் சாவகச்சேரிக்குமிடையில், றெயில் மோட்டோர் தங்குமிடங்களாகக் குயவன் மடம், சங்கத்தானை என்னுமிடங்களுமே றெயில்வேப்பகுதியாரால் டிக்கற், நோட்டீஸ் முதலியவைகளிற் குறிக்கப்பட்டவைகளாகும். அப்படியிருக்கக் கோயிற்குடியிருப்பில், ஆஸ்பத்திரிக்கருகாமையாகப் புதிதாயமைக்கப்பட்ட இடத்தில் சங்கத்தானை யென்றெழுதப்பட்ட போட்பலகையும், சங்கத்தானையிற் குயவன்மட மென்றெழுதப்பட்ட போட்பலகையும், நடப்பட்டிருக்கின்றன.

சங்கத்தானைப்போட்பலகை முன்னர்ச் சங்கத்தானையிலேயே நாட்டப்பட்டது. சரியாக நாட்டப்பட்ட அதை, நாட்டியவர்தானே மீண்டு பிடுங்கிக்கொண்டுபோய் ஆஸ்பத்திரிக்கருகாமையில் நாட்டினர். அவர் சுதேசியாயிருந்தும் அங்ஙனம் மாறி நாட்டியதற்குக் காரணம் தாமூரப்பெயரை ஓர் இழிவுடைப் பெயரெனக் கருதி அதனை மறைப்பான் நினைத்தோ, அன்றேல் சங்கத்தானை யென்னுஞ் சற்பெயரைத் தமதூரிற்கு வழங்குவிப்பான் நினைத்தோ அறிகிலம். பெயர்மாற்றத்திற்கிலே தகுந்த சம்மதம் பெற்றிருந்தனர் போலும். இற்றைக்கு எத்தனையோ நூற்றாண்டுகட்குமுன் தொட்டே சங்கத்தானையென அவ்வூர்க்குப் பெயர்வந்த காரணம் இவர்க்கெட்டியதில்லைப்போலும்.

மேலும் இவ்வித தடுமாற்றமான இடமாற்றத்தினால் பிரயாணிகள் படுந் தடுமாற்றமோ இவ்வித தடுமாற்றத்திலும் கூடியதாகவிருக்கின்றது. இன்னும் இப்படி இவர் எத்தனையூர்ப் பெயர்களைக் காலத்துக்குக்காலம் மாற்றுவாரோ தெரியவில்லை.

இத்தடுமாற்றத்தை றெயில்வே மேலுத்தியோகஸ்தராவது அதனோடு சம்பந்தமாகிய சட்டநிரூபணசபை அங்கத்தவராவது நீக்கி அவ்வவ் விடங்கட்கு அவ்வப்பெயர் பொறிக்கப்பட்ட பலகையை நாட்டிவைக்கும்படிக்கும், குயவன்மடம் என்னுமிடத்தில் றெ. மோட்டர் தங்கச் செய்து வைக்கும்படிக்கும் மாத்திரமல்ல கண்டாக்டரின் ஊர்களுக்கு அவ்வூர்ப்பெயரையே காட்டிவைக்கும் படிக்கும் அன்னாரை அதிக தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகின்றேம்.

இங்ஙனம்,
சங்கத்தானைவாசிகள்

நம்மவர்கள் அக்கினிகாரியஞ் செய்யும்போது கவனிக்கவேண்டிய விஷயம்.

இரண்ணியை, கனகை, ரக்தை, கிருஷ்ணை, சுப்பிரபை, அதிரக்தை, பகுரூபை, என்னும் ஏழு நாக்குகளுடன் அக்கினிதேவன் விளங்குவார்.

இவற்றுள் இரண்ணியை என்னும் நாக்கு மேற்குப்பக்கத்திலும், கனகை என்னும் நாக்கு நடுவிடத்திலும், ரக்தை என்னும் நாக்கு வடக்குப்பாகத்திலும், கிருஷ்ணை என்னும் நாக்கு தெற்கிலும், சுப்பிரபை என்னும் நாக்கு கிழக்குத்திக்கிலும், அதிரக்தை என்னும் நாக்கு அக்கினி மூலையிலும், பகுரூபை என்னும் நாக்கு ஈசானதிக்கிலும் இருக்கும். இவைகளுள் விவாககாலத்தில் மேற்குப்பக்கத்திலிருக்கும் இரண்ணியை என்னும் நாக்கிலும், யாக முதலிய கருமங்களில் நடுவிடத்திலுள்ள கனகை என்னும் நாக்கிலும், உபநயன காலத்திலே வடபாகத்திலுள்ள ரக்தை என்னும் நாக்கிலும், பிதிர் கருமஞ் செய்யுங் காலத்திலே தெற்கிலுள்ள கிருஷ்ணை என்னும் நாக்கிலும், இஷ்டசித்தி முதலிய கருமங்கள் செய்யுங் காலத்திலே கிழக்குத்திக்கிலுள்ள சுப்பிரபை என்னும் நாக்கிலும், கிரகசாந்தி பிரதிஷ்டை சயசாந்தி முதலியவை செய்யுங் காலத்திலே அக்கினி திக்கிலுள்ள அதிரக்தை யென்னும் நாக்கிலும், மாரணசாந்தி முதலியவை செய்யுங் காலத்திலே ஈசானதிக்கிலுள்ள பகுரூபை என்னும் நாக்கிலும் ஓமஞ்செய்ய வேண்டும். இவ்விதம் அக்கினியினுடைய ஏழு நாவையும் அறியாது ஓமஞ் செய்தால் செய்யுங் கருமங்களினால் பிரயோசனமில்லையாம்.

இத்துடன் பிரதிஷ்டா காலத்தில் விருத்த ரூபமாகவும், உத்ஸவ காலத்தில் யௌவன ரூபமாகவும், சீடாகாலத்தில் பால ரூபமாகவும் அக்கினியைப் பாவிக்கவேண்டும். அக்கினியைத் தியானிக்கும்போது இரத்த நிறமான உடம்பும், ஒரு கழுத்தும் இரண்டு முகமும், ஆறு கண்ணும், நான்கு செவியும், நான்கு கொம்பும், மூன்று காலும், ஏழு நாவும், ஏழு கையும், அவற்றில் வலதுபக்கத்தில் சுருக்குச் சுருவமும், வேலும், செபமாலையும், இடதுபக்கத்தில் நெய்ப்பாத்திரமும், விசிறியும், உடையதாகவும், ஆட்டின்மேல் இருப்பதாகவும் தியானிக்க வேண்டும். ஓமத்திரவியங்களை ஓமத்தில் உபயோகிக்கும்போது நெல்லு, அரிசி, பயறு, உழுந்து, கடலை, துவரை, மொச்சை, கொள்ளு முதலியவற்றை ஐந்து விரல்களால் ஆகுதி செய்யவேண்டும். எள்ளை மிருகிமுத்திரையினாலும், தயிரைத் துவித்த கையினாலும் ஆகுதி செய்யவேண்டும். நெற்பொரியை ஒரு பிடியளவெடுத்து ஓமஞ் செய்யவேண்டும்; பாயசம், பால், தேன் முதலிய திராவகப் பொருள்களைச் சுருவமென்னும் பாத்திரம் எவ்வளவு கொள்ளுமோ அவ்வளவு பிரமாணம் சுருவத்தாலும், ஏனைய பொருள்களை அவை எவ்விதம் இருக்குமோ அவ்விதமே ஒரு பலப் [16 களஞ்சு] பிரமாணமாகவும், அன்னத்தை ஒரு கவள அளவாகவும் கிழங்கு வகைகளை முஷ்டிப்பிரமாணமாகவும், பணிகாரவகைகளைச் சிறிது சிறிதாகத் துண்டுசெய்தும், பழவகைகளை நாலங்குல அளவாகவும், சந்தனத்தைக் கடலைப் பிரமாணமாகவும், சர்க்கரை தங்குலிய முதலியவற்றை இலந்தைப்பழ அளவாகவும், நெய்யை ஒரு களந்தளவாகவும், சமித்து, கரும்பு, கொடி யென்னுமிவற்றை ஒரு சாணளவாகப் பதாக முத்திரையினாலும், அன்ன முதலியவற்றைச் சங்க முத்திரையினாலும் ஓமஞ்செய்ய வேண்டும். (தொடரும்.)

ச. பொன்னுஸ்வாமிக்குருக்கள்,
அம்மன்கோயில்,
சுதுமலை.

அம்மிமிதித்தலா? கல்மிதித்தலா?

நம் சைவநேயர்களே!

இல்வாழ்வார்க்குப் பிரதான உபகரணங்களாகிய ஏழினுள் "பேஷணி" யென்பதொன்று மானவாதி பல தருமசாஸ்திரங்களில் விதிக்கப்பட்டிருக்கிறது. அரைத்தற்கருவியென்பதிதன் பொருள். அம்மியுங் குழவியுமாகிய இவ்விரண்டின் கூடியல்லது அரைத்தற்றொழிலியலாமையின், ஓரே பெயராகக் கூறப்பட்டது.

இவற்றுள் அம்மியென்பது கனமும் விசாலமுமுடையதாயசையாதிருக்கும்படி பெருஞ்சிலையினாலும், குழவியென்பது அதன்மீதுருண்டரைக்கத்தக்க வடிவாக நீளமுள்ள சிறுசிலையினாலுஞ் செய்யப்பட்டுச் சிலையென்னும் பொதுப்பெயர் நீங்கிச் சிறப்புப்பெயரால் அம்மி குழவியென்றே வழங்குகின்றது. சிலையென்பதாகுபெயராயம்மியை யுணர்த்தினும் அம்மியென்பது அம்மிதான். சிலையினாலொரு விக்கிரகமமைத்தாலவ்விலக்கணமுள்ள விக்கிரகமென்று பெயர் வழங்குமேயன்றிச் சிலையல்லது கல்லென வழங்கும் வழக்கமில்லையே. ஆசையினால், "அம்மிமிதித்தல்" என முகவுரையிட்டுப்பின் கல்லென எழுதத் துணிந்தது, கருங்கல், வெண்கல், செங்கல், முருகைக்கல், மாக்கல், சந்தனக்கல், உரைகல் என்றிவ்வாறு கல்லென வழங்குமொன்றைச்சமயத்திற்சேர்ப்படி சாதிக்கலாமென்ற துணிபு போலும். "அம்மிமிதித்தல்" என்னும் முகவுரையிட்டு எடுத்துக்கொண்ட அகோர சிவாசாரியர் பத்ததியுரையிற்றானே அம்மியென்று அச்சிட்டிருக்கவும், திருவிளையாடற்புராணம், திருவானைக்காப் புராணம்; திருக்கோவிலூர் புராணம், காசிகாண்டம் முதலிய வற்றிலெல்லாம் அம்மியென்றே வழங்கியிருக்கவும், முன்னோரெவரும் அம்மி குழவியைவைத்து வழங்கியிருக்கவும், ஒருகல்மாத்திரம் வைக்கவேண்டுமென்ற விபரீதம் வியக்கப்பாலதே. சிவன்கோவிலென்றால் விநாயகர் முதலிய மூர்த்திகள் மாத்திரமா மூலத்தானத்திற்சிவலிங்கந்தவிர ஆவுடையார் ஆகார சிலை யென்னுமிவைகளுமங்கிருக்கலாகா வென்று இனிச் சாதிப்பர் போலும். விபரீதம்! விபரீதம்!! இது நிற்க.

அம்மிகுழவியென்னுஞ் சொற்களை ஆராய்வோம். ஆரியத்தில் "அச்ம" என்பது மலைப்பாஷையின் பெயராய்த் தமிழில் "அம்மம்" என வழங்குகின்றது. சரீரமெங்கும் வியாபித்து முலையிற்சாப்பதென்பதிதன் பொருள். இதனையுடையாள் "அச்மா" எனப்படுவாள். இதுவே "அம்மை" என்று பெற்றோர்க்கு வழங்குகின்றது. பெற்றாள் தன்பிள்ளை தன்மேல் விழுந்துழக்குதல், குற்றுதல் முதலியவைகளைச் செய்யினும் பொறுத்துப் பாலூட்டி யெடுக்கி, இனிது பாவிப்பதுபோல, அம்மிதன்மேல் விழுந்துருக்குதல், அரைத்தல் முதலியவைகளைச் செய்யுங் குழவியை யசையாதெடுக்கி வைத்திருப்பதுபோல அருகிற் சார்த்தப்பட்டிருக்குமுரிமையை யுடையதாதலின் அதற்கு அம்மியென்று பெயர் வழங்குகின்றது. அதாவது அம்மை போலுதலின் அம்மியென்றும், குழந்தைபோலுதலிற் குழவியென்றும் வழங்குகின்றதென்பதாம்.

அம்மியையுங் குழவியையும் வேறாகப் பிரித்தவர்க்கு நரகவேதனையுண்டாகுமென்று சித்திரகுப்தோபாக்கியானத்தில் விளக்கப்பட்டிருக்கிறது.

விவாக மண்டபத்தில், நான்கு நாள் வரையும் அம்மியிருக்கவிடு. குழவியவ்வளவு நாளுமெங்கேயோ கிடக்கவேண்டுமென்பது தலைவிதி போலும். பாவம்! பாவம்! அம்மியைமாத்திரம் வைக்கவேண்டுமென்கிறார்களே. கல்யாணவீட்டுக்கு வந்த தாய்மார்கள் நாலுநாளுங்கல்யாணப் பார்க்கில் தங்கள் குழந்தைகளைத் தேடாமலும் பால்கொடாமலும், குழந்தைகளுந் தாய்மார்களைத் தேடாமலும் பாலருந்தாமலுந் தனியேயிருப்பார்களா? இதென்ன கொடுமை. எப்போதும் அணுகியிருந்த அம்மிகுழவியை, கூட்டிவைக்குங் கல்யாணகாலத்திற் பிரித்தாற் பெண்பாலாரும் நகையாடார்களா?

மணமகன் மணமகளோடு ஏழடி நடந்தபின்னரே அவளுடைய கோத்திர உரிமையை அடைவான். ஆனபின் மஞ்சள் முதலிய அலங்காரங்களாற் சிறந்து குழவியோடு கூடியிருக்கும் மங்கலகரமாகிய அம்மியை மணமகன் நற்சகுனமாகக் கண்டு, மணமகளுக்குங் காட்டி "நீ திடசித்தமாய் நெறிதவறாது சற்சந்ததி பெற்று வாழுதற்கு அடியெடுத்துவை" என்னுங் குறிப்பால் மணமகளின் காலை மணமகன் தூக்கிவைத்தல் வேண்டுமென்பது நூற்றுணிபு. மூன்றுதரம் வைத்தல் இச்சந்தர்ப்பதிலைமையை வற்புறுத்துதற்காம். "அம்மியையும் குழவியையுங் குறிப்பதாயின் அச்மானெ" என எழுதியவர், அவ்வாறு இருமையாகப் பிரயோகிக்கில் இரண்டம்மியென்றே பொருள்படும் என்பதை நல்லார்வாய்க் கேட்டறியக்கடவர். கல்வைத்தல், கல்லெடுத்தல் முதலியவை மங்கல காரியங்களில் மங்கல வார்த்தையெனவு மறியக்கடவர்.

அறிஞர்களே! மண்டபத்தில் குழவியோடு அம்மியை வைக்கவேண்டுமென்பதே பல நூற்றுணிபாகையாலும், முன்னோர் வழக்கமாகையாலு மவ்வழியே ஒழுகி உய்வீர்களாக.

இங்ஙனம்,
ந. சபாரத்தினக்குருக்கள்.
சாரதாபீட வித்தியாசாலை,
புலோலி.

சமய உணர்ச்சி.

(முற்றொடர்.)

மரணத்தின் பின்னரும் மாயாதிருக்கும் நம்முயிர் இன்புற்றிருப்பதோ அல்லது துன்பிற்றுளங்குவதோ நானவில் நம் வசத்திலேயேயன்னது. "தாமே தமக்கு விதிவகையும்" என்பது மணிவாசகம். ஆதலின், பகுத்தறிவு படைத்த நாம், நம் பிற்கால வாழ்வும் செப்பமுடைத்தாயிருக்கும்படி—செத்த பின்னும் க்ஷேமமாயிருக்கும்படி—இவ்வுலகில் நமது வாழ்க்கையை நடாத்தியா வேண்டும். இப்படி வாழ்க்கையை நடாத்துதற்குச் சமய உணர்ச்சியும் அதன் வழித்தாய ஒழுக்கமும் இன்றியமையாதன.

இத்தகைய தூயவாழ்க்கையில் இரண்டு கூறுகள் உள்ளன. முதலாவது, நம்மை நாம் தூய்மைப்படுத்திக் கொள்ளுவதாம். இயமம், நியமம், பிராணாயாமம் முதலிய எட்டுப்படிகள் சமய நெறியிற் செல்லுவார்க்கு விதிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் முதலிரண்டாயுள்ள இயம நியமங்களையாவது ஒவ்வொரு மகனும் மகளும் தவறாது கைக்கொள்ள இடைவிடாப் பெருமுயற்சி செய்ய வேண்டும். இறைவன் யாண்டும் நீக்கமற நிறைந்திருந்து நல்லாரின் நன்மையையும், பொல்லாரின் புன்மையையும் எப்போதும் அறிந்து அவரவர் குணஞ் செயலுக்கேற்ப இன்ப துன்பங்களை என்றுமன்றும் ஊட்டி வருகின்றான் என்பதை மறத்தலாகாது. இந்த ஒரு நினைவு நம்முள்ளத்தில் நிலைபெறுமாயின், இயம நியமப் படிகளைத் தாண்டுதல் எளிதாம். இஷ்டதேவதை வழிபாடும் இதற்குத் துணையாமாறுண்டு. உபாசகன் அதனை உருவமாகவோ மற்றெவ்வாறோ நாடோறும் நினைத்து வணங்கித் தன் குறைகளை எடுத்துக்கூறித் தன்னை மேனெறிக்குய்க்குமாறு வேண்டுதல் பெரும் பயனுடைத்தாம். ஆனால், இதில் ஒரு எச்சரிக்கை தேவை. தான் கொள்ளும் இஷ்ட தேவதையின் வடிவு, குணம், தொழில், வரலாறு முதலிய யாவும் தூயவாயும் கடவுளிலக்கணத்துக்கு மாறாதனவாயும் இருத்தல் வேண்டும். காமக்குரோதாதிகளுடையதென்று தன் வழிபடு தேவதையே கருதப்படின், அவற்றைத் தொலைக்க முயலுந் தனியுயிருக்கு நாடிய பொருள் கைகூடாது. தூய அன்போடு செய்யும் வழிபாட்டைப் போலவே, புலனழுக்கற்ற அன்பர் கூட்டமும் பேருதவிசெய்ய வல்லது. அத்தகைய அன்பர்கள் அருளிச்செய்த நூல்களும் துணையாகத் தருவனவே.

'குறிகளும் அடையாளமும் கோயிலும்' சமயவுணர்ச்சிக்கு அரண்செய்யவே ஆதியில் அமைக்கப்பட்டன. பின்பு அம்மரங்களிற் புல்லுருவி முளைத்துவிட்டது. நமது பழைய கோயில்களைப் புதியதோர் முறையிற் பயன்படுத்திக் கொள்ளலாமென்று தோன்றுகிறது. அன்பர்கள் இதைச் சோதித்துப் பார்த்துப் பயனுடையதெனக்காணின் தாம் கைக்கொள்வதோடு ஏனைய இந்துக்களையும் கைக்கொள்ளத் தூண்டுவார்களாக. இப்போது பல ஆலயங்களில் ஜனங்களுக்குச் சமய அறிவோ உணர்ச்சியோ ஒரு சிறிதாய்க் கிடைக்கவில்லை யென்பதும் அவர்களை மேனெறியி லுயர்த்தவில்லை யென்பதும் வெளிப்படை. நான் குறிக்கும் உபாயம் பின்வருமாறு:— குறித்த வாரத்தில் ஒருநாள் மாலையில் தீபாராதனை வேளையில் ஒவ்வொரு ஊரிலுமுள்ள அன்பர் பலர் ஒன்று சேர்ந்து அவ்வூர் ஆலயத்திற்குச் செல்லவேண்டும். திருக்கோயிலின் மூலஸ்தானத்திலுள்ள திருவுருவைத் தரிசித்து வலம் வந்தும், அக்கோயில் எல்லைக்குள் தூயதோர் இடத்தில் அவர்கள் கூட்டமாய் அமரவேண்டும். மனதைச் சாந்தப்படுத்த யாவரும் சிறிது நேரம் மோனஞ் சாதிக்க வேண்டும். பின்பு தத்தம் பயிற்சிக்கேற்றவாறு பரமனை நெஞ்சகத்தேயே தியானிக்க முயலவேண்டும். இப்படிச் சுமார் ௧௦ நிமிடநேரம் கழிந்தபின்பு, முன்னமே குறிக்கப்பட்ட ஒருவர் மக்கட்குத் தூய்மையிலும் அருளொழுக்கத்திலும் ஆர்வத்தை விளைக்கவல்ல பெரியார் திருவாக்கு ஒன்றிரண்டைப் படித்தோ பாடியோ சுமார் ௧௫ நிமிடம் பொருள் விளக்கவேண்டும். வாரத்திற்கு ஒவ்வொருவர் இப்படிப் பேசிப் பழகுதல் நலம். பின்னர், மற்றொருவர், கூட்டத்தாரனைவர்க்கும் பொருந்தும் வகையில் இறைவனை நோக்கி ஒரு விண்ணப்பத்தை மனவுருக்கத்தோடு உரை நடையில் செய்யவேண்டும். இறுதியாக யாவரும் முன்போல் மௌன வழிபாட்டில் அமர்ந்து ௧௦ நிமிஷம் அமைதியாயிருக்க வேண்டும். இவ்வாறு வழிபாடாற்றிப் பின்னர் மறுவாரம் நடப்பு பொருள் கூறவேண்டிய பாடல், உபந்யாசகர் முதலிய விபரங்களை அறுதிகொண்டு அவரவர் இல்லமேக வேண்டும். இம்முறையில் அக வழிபாட்டை அவரவர் ஊரிலுள்ள ஆலயங்களில் அனைவரும் கிரமமாய்ச் செய்து வருவரேல் அவர்களிடம் உண்மை, அன்பு, அஞ்சாமை ஆகிய சமயப் பண்புகள் விளங்கும். ஆலயங்களும் புத்துயிர் பெற்றிலங்கும். சன்மார்க்கத்திற்கு மீண்டும் உலகில் வலிமை பெருகுக. இவ்வாறெல்லாம் பாடுபட்டு நாம், நம்மைப் படிப்படியாய்த் தூய்மைப் படுத்திக்கொண்டு, பின்பு, நம்மினுந் தாழ்ந்த பக்குவத்திலுள்ள உயிர்கட்கு நம்மாலியன்ற அன்புப் பணி இடைவிடாது செய்து வரவேண்டும். எல்லாப் பணிகளையும் தூய்மைப் படுத்துவதும், தானே தனிப்பெரும் பணியாய் நிற்பதும் சமயப் பணியேயாம். இத்துணைச் சிறப்புவாய்ந்த சமயத்தொண்டைக் காலமிடமறிந்து, தக்க தலைவர்கள் கட்டாயமாய்ச் செய்ய முற்படுவாராயின் இந்தியாவே உலக குருவாய் விரைவில் விளங்குமென்பதில் சிறிதும் ஐயமில்லை.

இந்த நோக்கங்களும் முயற்சிகளும் ஆண்மக்களுக்கு மட்டுமிருத்தல் சாலாது; பெண்மக்களுக்கும் வேண்டும். மக்கட் கூட்டம் ஆண் பெண் வடிவினதாயுள்ளது. ஒன்றைவிட்டொன்று உயர்நெறிச் செல்லுமாறில்லை. மாதிருக்கும் பாதியனும் மகாதேவன் கோலங்கொண்டது இவ்வுண்மை புலப்படுத்தவே. இப்படி ஆணும் பெண்ணுமாயிலகு முலகில் ஆண்பாதி பெருமுயற்சியவிடுபடப் பெண்பாதி மட்டும் தாழ்நிலையில் தங்கிக்கிடந்தால், மக்கள் தொகுதி விகார நிலையையே எய்தும். உடம்பிலோர் பாதி பரிசவாயுவால் செயலற்றுக்கிடக்கையில் மற்றப் பாதி தொழிற்பட்டால் ஏற்படும் விகாரநிலையை நினைவுகூர்தல் வேண்டும். ஆதலின் பெண்மக்களும் உயர்ந்த குறிக்கோளுடையராய் ஆண்களுக்குதவி உயர்த்தி, அவருதவியால் தாமுமுயர்தல் தலைவன் காட்டிய நன்னெறி முறையாம். பெரியபுராண நாயன்மார்களுள் இல்லறநெறி நின்றோர் வாழ்வில் இவ்வுண்மையியல்பைக் காணலாம். இங்ஙனமெல்லாம் சமயவுணர்ச்சியைப் போற்றி வளர்த்து ஆடவரும் மகளிரும் உலகு, உடம்பு, பிறவுயிர், காலம், தேசம்முதலிய எவற்றாலும் தடைப்படுத்தப்படாத பேரின்ப நிலையை அடைந்து இறைவன் திருவுளப்பாங்கின்படி இனிது வாழ்தலே நிரம்பவும் அழகிய நிலைமை. இஃதே சமய உணர்ச்சியின் சிறந்த பயனுமாகும்.

—குமரன் ஆண்டுமலர்.

ஸந்தீபன லேகியம்.

ஓர் புதிய யூனானிமுறை.

இந்த லேகியத்தை மிகவுஞ் சிரமப்பட்டு அரிய பல மூலிகைகளைக்கொண்டும லாலாமிஸ்ரி, பஞ்சாப்மிஸ்ரி, ஸாருஞ்சான்மிஸ்ரி, போஜிதான்மிஸ்ரி, தீர்மூன்வி விரை, இஸ்கூல்விரை, விளாயபிசின, பேதாஞ முதலிய யூனானி சரக்குகளைக்கொண்டும, நரம்புகளுக்குப் புருஷ ஜனனேந்திரியங்களுக்கும வலுவைக்கொடுத்துக் கெட்டிப்படுத்தி ஸம்பூர்ணமான சுகத்தை அநுபவிக்கும்படியான சரீர திடத்தைக் கொடுக்குமாறு அரிய முறையாய்ச் செய்யப்பட்டு இருக்கிறது. குணமில்லாவிடில் பணம் வாபீஸ் செய்யப்படும்.

40 நாள் சாப்பிடக்கூடியது ரு. 2—0—0.

அஸ்வினி
ஆயுர்வேத வைத்தியசாலை,
துக்கரச்சேரி,
கொடவாசல் போஸ்டு,
(M 62) தஞ்சைஜில்லா.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்,
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க,
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க,
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed & published by Pandit V. T. Sambandhan for and on behalf of the Proprietors, the Jaffna Saiva Paripalana Sabai, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai.